செ.வெ.எண்:18 நாள்:10.04.2017

# அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.04.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (10.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **1472** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து, அரியலூர் அரசு தலைமை மருத்துவமனை மரு.ரமேஷ் அவர்களிடம் அவசர சிகிச்சை பகுதி மற்றும் 500 வார்டு பகுதிக்கு வெள்ளை சுண்ணாம்பு பூசுவதற்கு **ரூ.25,000/-**க்கான காசோலையினையும், அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில் நுண்ணீர் பாசன திட்டம் 2016-17ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுவருகிறது. அரியலூர் வட்டாரத்திலுள்ள அருங்கால் கிராமத்தில் 17.03.2017 அன்று சொட்டுநீர் பாசன முறையில் கரும்பு மற்றும் மக்காசோளம் சாகுபடி செய்துள்ள விவசாய நிலங்களை பார்வையிட்டு ஆய்வு செய்த பொழுது, விவசாயிகள் நீரில் கரையும் உரங்கள் கோரிக்கை வழங்க கோரிக்கை விடுத்தனர். அதனைத்தொடர்ந்து 16 விவசாயிகளுக்கு **ரூ.24,640/-** மதிப்பில் நீரில் கரையும் உரங்களையும், இடையத்தாங்குடி, **திரு.வேலயுதம், த/பெ.வடிவேல்** என்பரது வயலின் தீவன மக்காசோளம் கருகியதால் இழப்பீட்டு தொகையாக **ரூ.5,000/-**க்கான காசோலையினையும், மாவட்ட ஆதிதிராவிடர் நல துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தலா ரூ.5000/- வீதம் **ரூ.30,000/-** மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் 11 பயனாளிகளுக்கு தலா ரூ.5000/- வீதம் **ரூ.55,000/-** மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

மேலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சுயவேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் 20 பயனாளிகளுக்கு **ரூ.2 இலட்சம்** மதிப்பிலான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) திரு.பாலாஜி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.ஹேமலதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரூபன்தாஸ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எம்.இம்தியாஸ்முகமது, இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வ.சீனிவாசன், வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.